# பணிநிறைவு வாழ்த்து!

திருமிகு **கே. திருஞானம்** இ.வ.ப.

நாள்:31-03-2023



பணியில் சேர்ந்து பயணிக்கும் போது,
இணையாய்ச் சிலரும் வெவ்வேறு கலன்களில்!
இணைந்துப் பயணிக்க புதிய கலனாய்,
முனைந்தே எங்கள் முகவரி தந்தோம்!

அணியாய் யாவையும் அகமகிழ்ந்தேற்று,
இணைந்து நடக்கையில், புதிய முகங்கள்!
அணைந்தே நாங்கள் அகமகிழ்ந்திருப்போம்!
பணியிடை அறிவால் பலவும் கற்றோம்!

படர்ந்து நடக்கையில் பலப்பல யுத்திகள்!
தொடர்ந்த கலனில் தொய்வில்லாமல்,
இடரின்றி தொடர இயைந்தே சிந்தித்து,
தொடர்ந்த நாட்கள் மனத்தில் முகிழும்!

அடர்ந்த அன்பில் நிறைந்தாருள் ஒருவராய்
தொடரும் நட்பின்சீர் **திருஞானம்** ஆவார்!
தொடர்ந்திட தமிழும் துணையாய் நிற்க,
படர்ந்த நட்பும் ஆழ்ந்தே நிறைந்தது!



கடந்து நிறையும் காலத்தின் பயனாய்,
கடகட வென்றே பணியும் நிறைந்திட,
தடையின்றி தொடரும் புதிய வாழ்க்கை!
மடைதிறந்த அன்பின் மகிழ்வுடன் நிரம்பி,

மனைவி மக்களுடன் மருவின்றி வாழ்க!
பினைந்த நட்புகள் என்றும் தொடர்ந்திட,
பிணியில்லா அருளாய் வாழ்வும் மிளிர,
அணியாய் இன்று அன்புடன் வாழ்த்து!

அன்புடன்,
**கு.ப. அசோகன்,**
மேனாள் சுங்க இல்ல மதிப்பீட்டு அதிகாரி.
28-06-2023